REGD.No. M. 6311 தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் ... ★ PHONE: 5563

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 28உ வெள்ளி (14—10—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 29உ சனி (15—10—55) [இதழ் 104

சீனத் தலைவர்களுக்கு இந்திய முந்திரிப் பருப்பு

பம்பாய், அக். 13—

இந்திய மக்களின் நல்லெண்ணத்துடன் சீனாவிற்கு புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஆர். கே. நேரு, தம்முடன் இரண்டு மணங்கு முந்திரிப்பருப்பு எடுத்துச் செல்வார் என்று தெரிகிறது.

அவர் தூதுவராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டுவதற்காக நடைபெற்ற தேனீர் விருந்து ஒன்றில் திருமதி நேரு, அந்த முந்திரிப் பருப்பு சீனக் குடியரசுத் தலைவர் மா-சே-துங், பிரதமர் சௌ-என்-லாய் ஆகியோருக்கு பரிசாகத் தரப்படும் என்றும், அவர்கள் இருவரும் 'இந்திய முந்திரிப் பருப்புப் பிரியர்கள்' என்றும், தன் துணைவருக்குக்கூட அது மிகவும் பிடிக்கும் என்றும் சிரிப்புக்கிடையே கூறியுள்ளார்.

பக்ரா-நங்கல் அணைத் திட்டத்தில் ரூ. 10 கோடி 'மோசடி'

சதி பற்றி அறிய பஞ்சாப் போலீசார் தீவிரம்

எஞ்சினீயர்கள் பதவி நீக்கம்

சாந்திகார், அக். 13—

பக்ரா—நங்கல் அணைக்கட்டு, மற்றும் அதை ஒட்டிய நிர்மாண வேலைகள் ஆகியவற்றிற்காகச் செலவிடும் கோடிக்கணக்கான ரூபாயில் கணிசமான அளவை, அதிகாரிகள் பலரும் மோசடி செய்ய மேற்கொண்டிருக்கிற 'சதி' ஒன்றை நிரூபிப்பதற்கு பஞ்சாப் சர்க்கார் தீவிரமாக முனைந்திருப்பதாகத் தெரிகிறது.

திட்டத்திற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள ரூ. 100-கோடியில், ரூ. 10 கோடி வரை மோசடி நடந்திருப்பதாக அதிகாரப் பற்றற்ற தகவல்கள் கிடைத்திருக்கின்றனவாம்.

'இவ்வளவு பெரிய தொகை மோசடி செய்யப்பட்டிருப்பதாக ஒப்புக்கொள்ள மறுத்தாலும், அதிகார வட்டாரம், 'கணிசமான அளவு' மோசடி நடந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

இதற்கிடையில், பஞ்சாப் துப்பறியும் இலாகாவினர், சில நிபுணர்களின் உதவியுடன், திட்டம் நிறைவேற்றப்படுவதில் செய்யப்பட்டுள்ள இலஞ்சம், மோசடி போன்றவற்றைக் கண்டுபிடிப்பதில் மும்முரமாக முனைந்திருக்கின்றனராம்.

இந்த புலன் விசாரணையை, மாநில போலீஸ் தலைமை அதிகாரியே நேரடியாகத் தலைமையேற்று மேற்கொண்டிருக்கிறாராம். புலனறியும் போலீஸ் குழுவினர், நங்கல், பாடியாலா, டில்லி, அம்பாலா, கல்கத்தா முதலிய இடங்களுக்குச் சென்று, மாநில நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த உயர்தர எஞ்சினீயர்கள் பலர் மீதுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்காக ஆதாரங்களைத் தேடிச் சேகரித்து வருகின்றனராம்.

சர்க்கார் பணத்தைக் கையாளுவதில் ஒழுங்குமுறை தவறி நடந்து கொண்டதாகக் குற்றம் சாட்டி, ஏற்கனவே பல முக்கிய எஞ்சினீயர்களை பஞ்சாப் சர்க்கார், தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைத்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

பொது மராமத்து இலாக்கா எஞ்சினீயரும், நீர்ப்பாசன பிரிவுச் செயலாளருமான எல். எஸ். குப்தா என்பாரை கடந்த வாரத்தில் பதவியிலிருந்து தற்காலிகமாக சர்க்கார் நீக்கிவைத்திருக்கிறது.

அவர், பக்ரா அணைக்கட்டின் ஒரு பிரிவின் பிரதம எஞ்சினீயராக இருந்த காலத்தில் பண மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

இலாகா ரீதியான விசாரணை ஒன்றும் அவர் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பக்ரா-நங்கல் திட்டத்தில் நடைபெற்றுள்ள மோசடி, இலஞ்சம் போன்ற பலவற்றைக் குறித்து இந்திய சர்க்காருக்கு, பஞ்சாப் சட்டசபை எதிர்க்கட்சியினரும் பல தகவல்கள் தந்திருக்கின்றனராம்.

பீகாரின் பேராசை

புதிய தொழிற்சாலைகள் மேலும் வேண்டுமாம்!

பாட்னா, அக். 12—

ஒரு புதிய உருக்குத் தொழிற்சாலையும், உரத் தொழிற்சாலையும் பீகாரில் நிறுவ வேண்டுமென, மத்திய சர்க்காருக்கு இரண்டு மனுக்கள் அனுப்பப்பட்டிருப்பதாக தொழில் மந்திரியான எம். பி. சின்ஹா சட்டசபையில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்கை எண்ணெய் உற்பத்திசாலை, கனரக மின்சார இயந்திரத் தொழிற்சாலை இவை பற்றியும் இந்திய சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மாநிலக் குழுவின் அறிக்கை தீக்கிரை

ஒரிய மக்களின் ஆத்திரம்

18-ந் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

கட்டாக், அக். 13—

மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை கண்டு அதிருப்தி அடைந்திருப்பதை எடுத்துக் காட்டும் அறிகுறியாக, அறிக்கையின் நகல் ஒன்றை ஒரு பொதுக்கூட்டத்தில் தீயிட்டுப் பொசுக்கியிருக்கின்றனர்.

கடந்த 50 ஆண்டு காலமாக உழைத்து வரும் 'உத்கல் சம்மேளனம்' என்ற கட்சியினர், இந்தக் கூட்டத்தை நடத்தினர்.

அவர்கள், ஒரிய மொழி பேசும் மக்கள் அனைவரையும் ஒரே மாநிலத்தில் இணைக்கவேண்டுமெனக் கோரிவருகின்றனராம்.

'ஒரிசா மாநிலத்தை அடுத்துள்ள இதர மாநிலங்களிலிருக்கும் ஒரிய மொழி வழங்கும் பகுதிகளை ஒரிசாவுடன் இணைக்கவேண்டும் என்ற ஒரிசாவின் கோரிக்கையை மாநிலக் குழு நிராகரித்தது அநியாயமானது,' என்று அவர்கள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

'தங்கள் கோரிக்கையை ஈடேற்றிக்கொள்வதற்காக ஒரிய மக்கள், ஒற்றுமையுடன் அமைதியாகப் போராட வேண்டும்' என்றும் அவர்கள் அறிவித்திருக்கின்றனர்.

'குழுவின் அறிக்கையை எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவிப்பதற்காக, வரும் 18-ந் தேதியன்று, ஒரிசா முழுவதும் கடையடைப்பு செய்ய வேண்டும்,' எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

★

மராட்டிய மாநிலம் அமைக்க நிபந்தனை

புதுடில்லி, அக். 13—

"பம்பாய் நகரை ஒரு தனிச் சுதந்திரப் பகுதியாக விட்டுவிட, மராட்டிய, குஜராத்தி தலைவர்களும் பம்பாய் நகரத் தலைவர்களும் சம்மதிப்பார்களேயானால், மராட்டிய மாநிலம் அமைவது நிச்சயம்,"

என்று, காங்கிரஸ் வட்டாரத்தினர் கருதுகின்றனராம்.

ஆனால், பம்பாய் நகரமின்றி மராட்டிய மாநிலம் அமைவது என்பதற்கு இணங்க முடியாது என மராட்டியத் தலைவர்கள் தெளிவாகத் தெரிவிக்கின்றனராம்

எதிர்க் கட்சித் தலைவரைக் காப்பாற்றிய அமைச்சர்!

தாரா சிங்கிற்கு ஜெகத்நாராயணன் உதவி

செம்பிகா, அக். 13—

ஜலந்தர் — அமிருதசரசுக்கிடையே வெள்ளத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த மாஸ்டர் தாராசிங்கிற்கு, அமைச்சர் லாலா ஜெகத்நாராயணன் உதவியுள்ளார்.

அப்பகுதியில், வெள்ளக் கொடுமையை அமைச்சர் சுற்றிப் பார்த்து வரும்போது, ஒரு இடத்தில், மோட்டார் காரில் அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங்கும், மற்றும் சிலரும் வெள்ளத்தில் அவதிப்படுவதைப் பார்த்தார்.

அகாலி தலைவரின் ஒரு உதவியாளர் மந்திரியை அணுகி, அமிருதசரஸ் அடைவதற்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டார். தாராசிங் குழுவினரை அமைச்சர் தன்னுடைய 'ஜீப்' காரில் ஏற்றிக்கொண்டு அமிருதசரசுக்கு அழைத்துச் சென்றார்.

சாமான் இரயில் கவிழ்ந்தது; நாசவேலை காரணமா?

பெல்லாரி அருகே சம்பவம்

பெல்லாரி, அக். 13—

குண்டக்கல்லிலிருந்து காடக் சென்று கொண்டிருந்த சாமான் இரயில் ஒன்று இன்று அதிகாலையில் தடம் புரண்டதாகத் தெரிய வருகிறது.

5 பெட்டிகளும், எஞ்சினும் தண்டவாளத்தைவிட்டு சரிந்து விட்டனவாம்; எவருக்கும் காயம் படவில்லை என்றும் கூறப்படுகிறது

இது, 'நாச வேலையினால் நேர்ந்த விளைவு' என்று சந்தேகிக்கப் படுகிறதாம்.

இந்த விபத்தின் விளைவாக, ஹூப்ளி—பெஜவாடா பிரயாணிகள் வண்டி ஹோஸ்பெட் நிலையத்தில் ஆறு மணி நேரம் தாமதிக்கப் பட்டிருக்கிறது.

கடுதாதினி — கொலாகொல்லு இரயில்வே நிலையங்களுக்கிடையில், பெட்டிகள் தடம் புரண்டன என்றும் அங்கு, பாதையில் உள்ள 'பிஷ் பிளேட்'டுகள் அகற்றப்பட்டிருந்தன என்றும் கூறப்படுகிறது.

சுமார் 100 கெஜ நீளத்திற்கு; பாதை பழுதாகிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

தே.ஆ. இன ஒதுக்கல் கொள்கை

பிரிட்டிஷ் தொழிற்கட்சி தீர்மானம்

"தென்னாப்பிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை, ஐ. நா. சாசனக் கொள்கைகளுக்கும், காமன்வெல்த் கொள்கைகளுக்கும் பொருந்தாதவை; ஐ. நா. மனித உரிமைப் பிரகடனத்தை இது மீறுவதாகும் எனவே தே. ஆ. இன ஒதுக்கல் கொள்கையை பிரிட்டிஷ் சர்க்கார் பலமாகக் கண்டிக்க வேண்டும்,"

என்று, பிரிட்டிஷ் தொழிற் கட்சி மாநாட்டில், தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிட தேவையான 'தகுதி'கள்!

அகில இந்திய காங்கிரஸ் நிர்ணயிக்கிறது

புதுடில்லி, அக். 13—

"கட்சியில் தீவிர உறுப்பினராயிருக்க வேண்டும்; கட்சி நிதிக்கு தனது பங்கை தவறாது செலுத்த வேண்டும்; ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும்; கடந்த காலத்தில் நல்ல சேவை செய்திருக்க வேண்டும்; நல்ல சமூகக் கொள்கை உடையவராக—குறிப்பாக, தீண்டாமை, நிலச் சீர்திருத்தம், தொழிலாளர் நலன், பொருளாதார நீதி இவற்றில் இருக்க வேண்டும்;

"காங்கிரஸ், அல்லது இதர பொது நிறுவனங்களுடன் சேர்ந்து ஆக்க வேலையில் ஈடுபாடு, சட்டசபைகள், நகர சபைகள், ஸ்தல ஸ்தாபனங்கள் இவற்றில் அனுபவம்—இவை எல்லாம், வருகிற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு ஆள் பொறுக்கும்போது பரிசீலிக்கப்பட வேண்டிய யோக்கியதாம்சங்களாகக் கருதப்படும்,"

என்று, அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 14—10—'55 வெள்ளி

சொன்னால் ஏற்பாரா?

வாய்ப் பறையால் ஊர்ப் பகை தேடிக் கொள்வதில், சென்னை நிதி மந்திரி கனம் சுப்பிரமணியம்தான், தென்னாட்டு காங்கிரஸ் கட்சியிலேயே மிகச் சிறந்தவராகக் காணப்படுகிறார். இல்லாவிட்டால் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், நம்மைப் பற்றி ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத வகையில் உளறிக் கொண்டிருக்கமாட்டாரல்லவா?

'தி. மு. கழகத்தினர் தங்கள் தலைமைப்பதவியை தொடர்ந்து காப்பாற்றிக் கொள்வதற்காக சில கோஷங்களை எழுப்பி வருகின்றனர்; எவரும் அதைப் பொருட்படுத்தத் தேவை இல்லை,' என்று கோவைக் கூட்டம் ஒன்றில் பேசியிருக்கிறார்.

தலைமைப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் 'கோஷம்' எழுப்புகிறோமாம்—கனம் கூறுகிறார்; இதில் ஒரு உண்மையை, அவர், தன்னை அறியாமலேயே ஒப்புக் கொள்ளுகிறார்; 'திராவிடர் இயக்கத்தவர் நாட்டு மக்களின் தலைமைப் பதவியைப் பெற்றிருக்கின்றனர்; தி. மு. கழகத்தின் தலைமையில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருக்கின்றனர்'—என்ற உண்மைதான் அது! ஒன்றைப் பெற்றிருந்தால் தானே அதைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் அல்லவா?

'இந்தத் தலைமைப் பதவியை எப்படி தி. மு. கழகம் பெற முடிந்தது? ஏன், தி. மு. கழகத்தின் தலைமையில் மக்கள் திரளுகின்றனர்?'—என்பதை, 'கனம்' சிந்திக்க வேண்டாமா?

'எவரும் இவர்களைப் பொருட்படுத்தத் தேவை இல்லை' என்று கூறுகிறார் 'கனம்'.

எவரும் நம்மைப் பொருட்படுத்தத் தேவை இல்லை என்று கனம் ஊராருக்கு உபதேசம் புரிகின்றார்; அந்த ஊரார், 'எங்களுக்கு உபதேசம் செய்யும் நீங்கள் ஏன் அவர்களைப் பொருட்படுத்திப் பேசுகின்றீர்கள்? நாங்களாவது சாதாரண மக்கள்; நீங்கள் கனம் மந்திரியாயிற்றே, பொருட்படுத்தலாமா? பொதுக் கூட்டத்தில் ஏசிப் பேசலாமா?'—என்று திரும்பக் கேட்கக் கூடும் என்பதை கனம் மறந்துவிட்டிருக்கிறார்.

'திராவிட நாடு என்பதை இவர்கள் வரையறுத்துக்கூறவில்லை'—என்று வேறு பேசியிருக்கிறார்—ஏதோ, திராவிட நாடு இலட்சியத்தையே பெரிய தவறு என்று நிரூபித்துவிட்டதாக மனதில் எண்ணிக்கொண்டு!

'திராவிட நாடு எது என்பதைக் குறிக்கும் எல்லைக்கோடுகள் காட்டப்படாததுதான், இவர் திராவிட நாடு இலட்சியத்தை ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம்' என்பதைப் போலப் பேசுகிறார்.

இவரைக் காட்டிலும் எல்லாத் துறையிலும் முதிர்ச்சி பெற்ற பலர், இதே கேள்வியைக் கேட்டபோது, நாம் தெளிவாக விளக்கம் தந்திருக்கிறோம்.

'திராவிடர் என்ற சொல் இலக்கியத்தில் உண்டா? ஆரியரும்—திராவிடரும் ஒன்றாகிவிட்டனரே? நீங்கள் யாரைத் திராவிடர் என்கிறீர்கள்? திராவிட நாடு அமைந்தால் வாழ முடியுமா? 'இந்தியா' என்ற 'பாரத மாதாவை'த் துண்டாடுவது நியாயமாகுமா? இந்திய சகோதர தேசிய இனங்களிடையே நிலவும் ஒற்றுமையைச் சீர்குலைப்பதாகும்—திராவிட நாடு கேட்பது,'—என்பன போன்ற பல கேள்விகளுக்கும், தி. மு. கழகம் தனது பால பருவத்திலேயே பதில் சொல்லியிருக்கிறது—தெளிவாக—விளக்கமாக—ஆதாரபூர்வமாக—வரலாறுகளையும், நடைமுறைகளையும் சுட்டிக்காட்டி!

'திராவிடநாடு, திராவிடருக்கு ஏன் அமைய வேண்டும்?' என்பதற்கான காரண விளக்கங்களை தேவையான அளவுக்கு எடுத்துக் காட்டிவிட்ட நிலையில், அந்த இலட்சியத்தை எப்படி ஈடேற்றிக்கொள்வது என்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதில் ஈடுபட வேண்டிய பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிறது, தி. மு. கழகம்.

திராவிடர்கள், தங்கள் விடுதலையை மீட்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது கண்டு, அவர்களின் விடுதலையைத் தட்டிப் பறித்து வைத்திருக்கும் வடநாட்டு ஆதிபத்தியக்காரர்கள் ஆடிப் போயிருக்கின்றனர். அவர்கள், இத்தனை நாளும், தங்கள் ஆதிக்கத்தை நிரந்தரமாக நிலைநாட்டுவதற்காக நம்பிக்கொண்டிருந்த சுப்பிரமணியம் போன்ற 'எடுபிடி'களால் இனி திராவிட விடுதலை இயக்க வளர்ச்சியைத் தடுப்பதற்கு இயலாது என்பதை உணர்ந்து, தாங்களே நேரடியாக களத்தில் இறங்கியிருக்கின்றனர்.

'பார்க்கிறேன், ஒரு கை' என்று கொக்கரிக்கின்றனர்—வட நாட்டுத் தலைவர்கள். நிலைமை இது; ஆனால், கனம் சுப்பிரமணியமோ, திராவிட நாட்டிற்கு எல்லை கேட்டுக் கொண்டிருக்கிறார்: என்ன செய்வது? எல்லையைக் குறித்துக் கொடுத்தால், கனம் சுப்பிரமணியம், திராவிட நாடு இலட்சியத்தை ஏற்றுக்கொள்வாரா?

தி. மு. கழகத்தைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிற—அதன் இலட்சியம் இன்னதென்று தெரிந்துகொண்டிருக்கிற சராசரி அரசியல் அறிவு படைத்த திராவிடர் ஒவ்வொருவரும், கனம் மந்திரியின் பேச்சிற்கு விளக்கம் தந்திருப்பர்.

பிரிட்டனில் அணு ஆயுதங்கள், நீர்வளிக் குண்டுகள் தயாரிப்பதைத் தடை செய்ய வேண்டுமென்ற பிரேரணை, பிரிட்டிஷ் தொழிற் கட்சி மாநாட்டில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

பிரேரணைக்கு எதிராக 53,00,000 வாக்குகளும், சாதகமாக 11,74,000 வாக்குகளும் கிடைத்தன.

நேரு பண்டிதர் மீது லண்டன் இதழின் குற்றச்சாட்டு!

லண்டன், அக். 13—

'டெய்லி எக்ஸ்பிரஸ்' என்ற தின இதழ், பண்டித நேருவின் மீதும், அவரது சோதரியார் விஜயலட்சுமி மீதும் 'தாக்குதல்' நடத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

'போர்ச்சுகல் ஜனாதிபதி இங்கு வரும்போது அவருக்காக நடைபெறும் வைபவங்களில், திருமதி பண்டிட் கலந்துகொள்ளமாட்டார் என்று அறிவிப்பு ஒன்று வந்திருக்கிறது;

'பெரிய சோதரர் நேருவுக்கும், அவரது சோதரியான விஜயலட்சுமிக்கும் 'வெடுவெடுப்பு' ஏற்பட்டிருக்கிறது! கோவாவை விட்டு வெளியேற போர்ச்சுகல் மறுப்பதுதான் அவர்களின் இந்த 'மனக்கடுப்பு'க்குக் காரணம்; என்றாலும், இந்தியர்கள் எதற்காக கண்ணியக் குறைவாக—மதியீனமாக நடந்துகொள்கின்றனர்?

"அவர்கள், இந்த நாட்டில் விருந்தாளிகள்; அவர்களின் போக்கு இன்னொரு விருந்தாளியின் மனதைப் புண்படுத்தாது; ஆனால், அவர்களின் போக்கு, பிரிட்டன் மீது அவர்களுக்குள்ள வெறுப்பை—அவமரியாதையை வெளிக்காட்டுவதாயிருக்கிறது."

பாக்தாத் ஒப்பந்தம்

ஈரான் சேருவதற்கு ரஷ்யா எதிர்ப்பு

லண்டன், அக். 12—

'துருக்கி—ஈராக் ஒப்பந்தத்தில் ஈரான் சேரும்' என அறிவித்திருப்பதாக வெளிவந்துள்ள செய்திகள், ரஷ்யாவிற்கு கவலையைத் தந்திருக்கின்றனவாம்.

'ஈரான் தன்னுடைய முடிவு பற்றி ரஷ்யாவிற்குத் தெரிவிக்கவில்லை; பத்திரிகைகளில் பார்த்தே தெரிந்துகொண்டோம்,' என்று, மாஸ்கோவில் உள்ள ஈரான் தூதுவரிடம் தரப்பட்டுள்ள குறிப்பொன்றில் ரஷ்யா தெரிவித்திருக்கிறது.

மேலும் அந்தக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:—

"இப்படி ஒரு அறிக்கையை இந்தச் சந்தர்ப்பத்தில் வெளியிட வேண்டுவது அவசியம் என்று ரஷ்யா கருதுகிறது; பாக்தாத் ஒப்பந்தம், மத்திய கிழக்கில் ஒரு இராணுவக் கூட்டமைப்புக்குச் சமமான ஒன்றாகும்; அந்தக் கூட்டமைப்பு, சர்வதேசப் பாதுகாப்பு, சமாதானம் இவற்றை உறுதி செய்வதில் அக்கரையில்லாத ஆக்கிரமிப்பு வட்டாரங்களின் கைப்பாவையாகும்;

"மத்திய கிழக்கில் தங்களுக்குள்ள காலனி ஆதிக்கப் பிடிப்பை நீடித்துக்கொள்ளவும், உறுதி செய்து கொள்ளவுமான உள்நோக்க இலட்சியம் கொண்டதும் கூட—அந்தக் கூட்டமைப்பு;

"ஈரான் அந்த இராணுவக் கூட்டமைப்பில் ஒன்று சேருவது, மத்திய கிழக்கிலும், சமீப கிழக்கிலும் சமாதானத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு பாதகமானதாகும்; மேலும், அது, ஈரான் ஒப்பந்தங்கள் சிலவற்றிற்கும், ஈரான்—ரஷ்யா இவற்றிடையே நிலவும் நெருங்கிய உறவுக்கும் முரணானதாகும்."

* * *

அரசியல்வாதிகள் மகிழ்ச்சி

வாஷிங்டன், அக். 11—

துருக்கி—ஈராக் (இராணுவ) ஒப்பந்தத்தில், ஈரான் சேரும் என்ற செய்தியை, மேற்கத்திய அரசியல்வாதிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்கின்றனர்.

'மத்திய கிழக்கில் கூட்டுப் பாதுகாப்பை உறுதி செய்யும் ஏற்பாட்டில் இது முக்கியமான, குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சியாகும்,' என்று அவர்கள் கருத்தறிவித்திருக்கின்றனராம்.

இலங்கையிலிருந்து 20,400 பேர் வெளியேறினர்!

கொழும்பு, அக். 12—

கடந்த 1954 டிசம்பர் 15-ந் தேதியிலிருந்து 1955 அக்டோபர் முதல் தேதிவரை சுமார் 20,400-க்கும் அதிகமான பேர்கள் இலங்கையிலிருந்து வெளியேறிவிட்டதாகத் தெரிகிறது.

இவர்களில், 13,590 பேர்கள், தாங்களாகவே வெளியேறினர் என்றும், 6,840 பேர்கள் 'வெளியேறுக' என்று இலங்கை சர்க்கார் பிறப்பித்த உத்தரவின் பேரில் வெளியேறினர் என்றும் அதிகாரபூர்வமாகத் தெரிய வருகிறது.

இன்னும் சுமார் 75,000 இந்தியக் குடிமக்கள் (இலங்கை குடிஉரிமை கோரியுள்ள எட்டு இலட்சம் பேர் நீங்கலாக) இலங்கையில் உள்ளனர் என்றும் தெரியவருகிறது.

மேலும், இலங்கையில் பல்லாண்டுகளாக, பல துறை வாழ்க்கையை மேற்கொண்டிருந்த பலரும், இன்று, திங்கள் ஒன்றுக்கு 2000 பேர் வீதம் இலங்கையிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

மாநில சீரமைப்புக் குழுவின் சிபாரிசுகள்

'நாட்டுப்பற்றை சீர்குலைத்துவிடும்'

டாக்டர் விஸ்வேஸ்வரையா எதிர்க்கிறார்

காரைக்குடி, அக். 11—

"பொதுவாக, நிலைகளை உயர்த்துவதற்காக மனிதர்கள் பாடுபட வேண்டும்; ஆனால், மாநிலக் குழுவின் சிபாரிசுகள் நிலைகளைக் கீழிறக்கவும், நாட்டுப்பற்றை குலைக்கவும், ஒவ்வொரு வட்டாரத்தின் பொருளாதார முன்னேற்றத்தை தடுக்கவுமான வழிகளைக் கூறியிருக்கிறது; ஒரு சுதந்திர நாடாகத் திகழ முற்பட்டுள்ள குறுகிய காலத்திற்குள் இத்தனை பெரிய மாற்றங்களை உண்டுபண்ண முயற்சிப்பது என்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது"

என்று, டாக்டர் எம். விஸ்வேஸ்வரையா தெரிவித்திருக்கிறார்.

"நான், இன்னமும் குழுவின் அறிக்கையை முழுவதும் படிக்கவில்லை என்றாலும், சிபாரிசின்படி அமையும் கர்நாடகம், மைசூரின் நலனுக்கு பாதகமானதாயிருக்கும்," என்றும் அவர் கூறினார்.

★

டாக்டர் ராதாகிருஷ்ணன் பாடும் பழைய பல்லவி

மீரஜ், அக் 11—

"மதம், சாதி, மாநிலப்பித்து, மொழி இவை நமது தேசிய ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் குலைத்துவிடாது பார்த்துக் கொள்ளவேண்டும்;

"மாநிலங்களைப் பிரிப்பது என்பது, நிர்வாக வசதிக்காக மட்டும் தான்;

"எல்லோருக்கும் சமத்துவ நீதி கிடைக்கும் நோக்குடன், எதிர்நோக்கியுள்ள பல சிக்கல்களுக்கும் இந்தியா பரிகாரம் தேடிவருகிறது.

"நமது இலட்சியங்களின் தலையாய சோதனை எல்லாம், நாம், நமது தேசிய ஒற்றுமையை எவ்வளவு தூரம் காப்பாற்றுகிறோம் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது,"

என்று, மாநிலக் குழு அறிக்கையைப் பற்றிக் கருத்தறிவித்த துணை குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் தெரிவித்திருக்கிறார்.

★

'பெல்லாரிக்கு நியாயம் வழங்கியுள்ளது'

சென்னை, அக். 11—

மக்கள் சபை காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரான ரகுராமையா, குழுவின் அறிக்கை தனக்கு மகிழ்ச்சியளிப்பதாயும், பெல்லாரிக்கும் அதை அடுத்துள்ள ஆந்திரப் பகுதிகளுக்கும், குழு, நியாயம் வழங்கியிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

மாநில எல்லைத் தகராறு

நவ. 7-ந் தேதி முதல் சென்னை—ஆந்திர சர்க்கார் பேச்சு

கோவை, அக். 11—

சென்னை—ஆந்திர மாநிலங்களிடையே உள்ள எல்லைத் தகராறுகள் குறித்து வரும் நவம்பர் 7, 8, 9-ந் தேதிகளில் இரு சர்க்காருக்குமிடையே சென்னை நகரில் பேச்சு வார்த்தைகள் நடக்கும் என்று மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

ஆந்திரப் பிரதிநிதிகளில் முதல் மந்திரி கோபால ரெட்டியுமிருப்பார்

வருகின்றனர்!

'அடுத்த ஜனவரியில், அரசாங்க மொழிக் குழுவினர் தென்னாட்டுக்கு வருகை தருவர்,' என்று, குழுவின் உறுப்பினரான திரு எம். சததியநாராயணா, சென்னையில் கூறியுள்ளார்.

உரிமை முழக்கம்!

ஐதராபாத், அக் 13—

'பணியாற்றுவதற்குத் தகுதியுடையவர்களாகத் தற்கால மகளிர் இருந்தபோதிலும் பொதுவாக அவர்களுக்கு வேலைகள் அளிக்கப்படுவதில்லை."

என்று, அ. இ. பெண்கள் மாநாட்டின் தலைவர் திருமதி இலட்சுமி மேனன் குறிப்பிட்டுள்ளார்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 120 இலட்சம் பேர்களுக்கு வேலை அளிக்கும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; அதில் குறைந்தபட்சம் 40 இலட்சம் வேலைகளாவது பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்," என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மறு பரிசீலனை செய்யப்படும்?

சென்னை சர்க்கார் கோரிக்கை

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் பற்றிய பிரச்சினையில், திரு-கொச்சி மாநிலத்தின் தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் பற்றி மறு பரிசீலனை செய்யும்படி சென்னை சர்க்கார் கோரக்கூடும் என்று செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இவ்விரு தாலுகாக்கள் பற்றி குழுவினர் தெரிவித்துள்ள கருத்துக்கள், அளவுக்கு மேற்பட்ட 'வக்காலத்து'போல் இருப்பதாக சர்க்கார் கருதுகிறதாம்.

இராஜப் பிரமுகர்கள் கவர்னர்களாக்கப்படுவராம்!

புதுடில்லி, அக். 12—

இலட்சக்கணக்கான ரூபாய் சம்பளம் பெற்றுவரும் இராஜப் பிரமுகர்கள், மாநிலக் குழு சிபாரிசுப்படி ஒழிக்கப்பட்டால், மீண்டும் கவர்னர்களாக நியமனம் பெறுவர் என்று கூறப்படுகிறது.

இப்போது ஒரு 'ஏ' பிரிவு மாநில கவர்னருக்கு ஆண்டொன்றுக்கு அறுபதாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் தரப்படுவதில்லை; ஆனால், இராஜப்பிரமுகர்களுக்கோ ரூ. 2,50,000 முதல் ரூ. 8 இலட்சம் வரை சம்பளம் தரப்படுகிறது.

'சுய ஆட்சி போதுமானதல்ல— சுய நிர்ணய உரிமை வேண்டும்'

சைப்ரஸ் நிலை குறித்து மகாரியஸ்

நிகோசியா—

இங்குள்ள தேவாலய தலைமைப் பீடத்தினர் இரகசியக் கூட்ட மொன்றில், சைப்ரசின் புதிய கவர்னர் தெரிவித்துள்ள சுயஆட்சி நிபந்தனைகளை நிராகரித்து தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளனர் என்று தெரிகிறது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஆர்ச் பிஷப் மகாரியஸ், கவர்னரைச் சந்தித்து இந்த நிராகரிப்பை அறிவிக்கவும், சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தவும் அதிகாரம் வழங்கப்பெற்றிருக்கிறார்.

சைப்ரசின் புதிய கவர்னர்-ஜெனரலான ஜான் ஹார்டிங், சைப்ரஸ் வாசிகள் பலாத்காரத்தைக் கைவிட வேண்டும் என்றும், சுயாட்சி வழங்குவதற்கு வழி திறந்தே இருக்கிறது என்றும் முதன் முதலாக பதவியேற்ற பிறகு வானொலியில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

"பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, எங்களால் ஒரு முடிவுக்கும் வர இயலவில்லை; ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்ளவும், புரிந்து கொள்ளவும் முடிந்ததால் பேச்சு வார்த்தைகள் முற்றிலும் பயனற்றவை எனக்கொள்ளத் தேவை இல்லையென்று நாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டோம்; பிரியும் முன்னர், நான் அவரைச் சந்திக்க எப்போதும் தயாராயிருப்பதாக ஆர்ச் பிஷப் மகாரியசிடம் தெரிவித்து விட்டிருக்கிறேன்" என்று ஹார்டிங் பத்திரிகைக் குறிப்பொன்றில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

★

பேச்சுவார்த்தை முறிவு

நிகோசியா, அக். 11—

சைப்ரசின் புதிய கவர்னர்-ஜெனரலான ஜான் ஹார்டிங், போராட்டத் தலைவரான 'ஆர்ச் பிஷப்' மகாரியசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் முறிந்தன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் சர்க்காரின் சுய ஆட்சித் திட்டங்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்றும், சுயநிர்ணய உரிமை தரப்பட வேண்டும் என்றும், அந்த நிலையிலிருந்து நழுவமுடியாதென்றும், மகாரியஸ் தெரிவித்ததாகவும், அதேபோல, தானும், பிரிட்டிஷ் சர்க்காரும் தங்கள் திட்டங்களை மாற்றிக்கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்து விட்டதாகவும் கவர்னர்-ஜெனரல் ஹார்டிங் தெரிவித்திருக்கிறாராம்.

★

இராணுவம் குவிகிறது

லண்டன், அக். 12—

சைப்ரஸ் தீவில், அமைதியையும், ஒழுங்கையும், சட்டத்தையும் நிலை நாட்டுவதற்கெனக் கூறி, மேலும் பிரிட்டிஷ் துருப்புகளை அனுப்ப முடிவாகியிருக்கிறதாம்.

தென்னாப்பிரிக்காவின் 'தனிச் சிறப்புகள்'

ஐ.நா. குழு அறிக்கை தரும் தகவல்

நியூயார்க், அக். 12—

"இனப் பாகுபாட்டினை, ஒரு முடிவில்லாத முழுக் கொள்கையாக—ஏன், தெய்வீக உரிமைக் கொள்கை என்று கூடக் கூறிக்கொண்டு அதனை மேற்கொண்டுள்ள நாடு தென் ஆப்பிரிக்காவைத் தவிர, உலகின் ஐந்து கண்டங்களிலும் வேறெங்கணுமில்லை;

"ஆப்பிரிக்காவைத் தவிர உலகத்தில் வேறெங்கும், ஒரு சிறுபான்மை இனம் தானே உண்டாக்கிய இனச் சிக்கலை, தானே தன் சொந்த நலனுக்காக ஒழிக்க முனைந்திருக்கவில்லை;

"நம்பத்தகாத ஒன்றை வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்க முடியும் என்று நம்புகிற சர்க்கார், தென்னாப்பிரிக்க சர்க்காரைத் தவிர உலகில் வேறெங்கும் இல்லை;

"நீண்ட எதிர்காலத்திலேனும் அடையவேண்டிய இலட்சியமாக ஒரு சர்வதேச வாக்கெடுப்பினை—சம்மதத்தினை ஒப்புக் கொள்ள மறுக்கும் நாடு, காமன்வெல்த்தில் தென்னாப்பிரிக்கா ஒன்றுதான்;

"ஆப்பிரிக்காவிலேயே தென்னாப்பிரிக்க நாட்டில்தான், எந்த ஒரு ஆலோசனை சபையிலோ, சட்டசபையிலோ, அந்த நாட்டுக் குடிமக்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமலிருக்கிறது,"

என்பதாக, தென்னாப்பிரிக்க நிலை பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஐ. நா. குழு தனது நடைமுறை ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

பிரெஞ்சு இராணுவத்தில் கலகம்

ஒரு அதிகாரி பதவி நீக்கம்; இருவர் கைது

பாரிஸ், அக். 11—

வட ஆப்பிரிக்காவிற்கு பிரெஞ்சு 'ரிசர்வ்' துருப்புகள் அனுப்புவது குறித்து பிரெஞ்சு இராணுவத்தில் ஏற்பட்ட கலகம் பற்றி பரிசீலிக்க பிரெஞ்சு மந்திரிகள் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்குப் பிறகு புதிய பாதுகாப்பு மந்திரி வெளியிட்ட உத்தரவுப்படி ஒரு சீனியர் இராணுவ-ஜெனரல் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்; இரண்டு கர்னல்கள் கைது செய்யப்பட்டனர். புதிய பாதுகாப்பு மந்திரியின் இந்த தீவிர நடவடிக்கைகள் இன்னும் மந்திரி சபையில் அங்கீகாரத்தைப் பெறவில்லை.

'ரிசர்வ்' படை ஏன் திரட்டப்படுகிறது என்பதை பதவியிலிருந்து நீக்கப்பட்ட அதிகாரி படையினருக்குத் தெரிவிக்கத் தவறிவிட்டார் என்றும், ரிசர்வ் படை திரட்டச்செய்த ஏற்பாடுகள் போதுமானதல்லவென்றும், ஒரு சர்க்கார் அதிகாரி தெரிவித்திருக்கிறார். இந்த இரு காரணங்களுக்காகவும்தான், ஜெனரல், பதவியினின்றும் நீக்கப்பட்டார் என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதி

ஓடும் இரயிலிலிருந்து தப்பினான்

மோராதாபாத், அக். 12—

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஒரு கைதி ஓடும் இரயிலிலிருந்து குதித்து தப்பி ஓடிவிட்ட செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது. டார்பட்பூருக்கும்—மொராதாபாத்திற்கும் இடையில் இரயில் ஓடிக் கொண்டிருக்கும்போது, கைதி கீழே குதித்துவிட்டான். அவன் எப்படியோ தனது விலங்குகளை அறுத்தெறிந்துவிட்டது, போலீசாருக்கு திகைப்பை உண்டு பண்ணியிருக்கிறது.

அந்தக் கைதியை, பெரிலியிலிருந்து ஷாஜகான்பூருக்குக் கொண்டு சென்று தூக்கிலிடுவதற்காகப் போலீசார் அழைத்துச் சென்றனர்.

தப்பியோடிய அக்கைதி இன்னும் போலீசார் கண்களுக்குத் தென்படவில்லை என்று கூறப்படுகிறது.

'பெருமை' பேசிப் பயன் என்ன?

"முதல் ஐந்தாண்டு திட்ட அமுலின் விளைவாக உணவின் சுய தேவை அளவை, நாடு அடைந்து விட்டது; சத்துக் குறைவை சரிக்கட்டுவதில் சர்க்கார் இனி கவனம் செலுத்தவேண்டும்," என்று, மத்திய உணவு மந்திரி அஜீத் பிரசாத் ஜெயின் கூறியுள்ளார்.

"பால், முட்டை, மீன், பழங்கள், சத்துப்பண்டங்கள் உற்பத்தியையும் விநியோகத்தையும் அதிகரிப்பதற்குத் திட்டங்கள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"சத்துள்ள உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பால் பண்ணைத் தொழில் அபிவிருத்தி, பராமரிப்பு, கால்நடை பராமரிப்பு ஆகியவற்றுக்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன," என்றும் அவர் கூறினார்.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் விவசாய அபிவிருத்திக்கு சுமார் ரூ. 350 கோடி ஒதுக்கியிருப்பதாக மந்திரி தெரிவித்தார்.

பஞ்சாப் வெள்ளம்

சேத விவரங்கள்

புதுடில்லி, அக் 12—

பஞ்சாபிலும், பெப்சுவிலும் 56 இலட்சம் ஏகர் பூமி வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாக மத்திய விவசாய இலாகாவிடம் தகவல் கிடைத்துள்ளதாம்.

ரூ. 30 கோடி பெறுமான பயிர் நாசமடைந்துள்ளதாயும், 75,000 வீடுகள் இடிந்து வீழ்ந்ததாயும், 1 இலட்சம் வீடுகள் சேதமடைந்ததாயும் தகவல் கிட்டியிருக்கிறதாம்.

வெள்ளத்தினால் உயிரிழந்தோர் தொகை தெரியவில்லையாம்.

இரத்தக் கொதிப்புக்கு பச்சிலை மூலிகை

ஏற்றுமதி செய்வதற்குத் தடை

சிந்த்வாரா,—

இரத்தக் கொதிப்பு, நரம்பு சம்பந்தமான வியாதிகளுக்குப் பயன்படுத்துவதற்காக 'சர்ப்ப காந்தா' என்ற பச்சிலை மூலிகையை சர்க்கார் நிலங்களில் பயிரிடுவதற்கு, மாநில சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

இந்தப் பச்சிலை மூலிகைகளை ஏற்றுமதி செய்வதற்கு சர்க்கார் தடை விதித்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

ஆக்க வேலைக்கு அணுசக்தி!

நியூயார்க், அக். 11—

'அணுசக்தியை ஆக்க வேலைக்கு அபிவிருத்தி செய்ய ஒரு அகில உலக நிறுவனம் அமைப்பது குறித்து பேச்சுவார்த்தைகள் துவங்க வேண்டும்' என்று மேற்கு நாடுகள் தெரிவித்திருந்த யோசனையை ரஷ்யா ஏற்றுக்கொண்டு விட்டது. மேற்கு நாடுகள் கருத்தை ஏற்பதாக ஐ. நா.-வில் ரஷ்யப் பிரதிநிதி அறிவித்திருக்கிறார்.

அமெரிக்காவில் உருக்கு நாணயம்

நியூயார்க், அக் 12—

மத்திய அமெரிக்காவில் இருக்கும் கோஸ்டாரிகா, தங்கச் சுரங்கங்கள் நிறைந்த நாடு; ஆனால்; அங்கு உருக்கை நாணயச் செலாவணியாக உபயோகிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

மற்ற உலோகங்களைக் காட்டிலும் உருக்கு பளபளப்பானதாகவும் அதிக நாள் நீடிப்பதாகவும் இருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

போர்ச்சுகல் மந்திரி அமெரிக்கா பயணம்

பம்பாய், அக் 12—

அமெரிக்க வெளிவிவகார இலாகா மந்திரி டல்லஸ் அழைப்பின் பேரில் போர்ச்சுகல் வெளிவிவகார இலாகா மந்திரி டாக்டர் பாலோஸ் குன்ஹா வரும் நவம்பர் திங்கள் 30-ந் தேதியன்று அமெரிக்கா சென்று 3 நாட்கள் தங்குவார் என்றும், இரு மந்திரிகளும் பரஸ்பரம் நலன்கள் பற்றிப் பேசுவார் என்றும் கோவா வானொலி தெரிவித்திருக்கிறது.

உண்ணாவிரதம் மேற்கொள்வாராம்!

டாக்கா, அக். 10—

கிழக்குவங்காளத்திற்கு மாகாண சுயாட்சி வழங்க வேண்டுமென்றும், பாகிஸ்தான்—அமெரிக்கா இராணுவ ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் கிழக்கு பாகிஸ்தான் அவாமி லீக் தலைவர் வற்புறுத்தியுள்ளார்.

அக்கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி, அக். 21-ந் தேதி முதல் உண்ணாவிரதம் மேற்கொள்ளுவதற்கு தான் உத்தேசித்திருப்பதாகவும், ஆனால், தன் சகாக்களைக் கலந்தாலோசித்த பின்னரே அதுபற்றி முடிவு செய்யப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போலீஸ் இலாகாவில் நிர்வாக மாற்றங்கள்

சென்னை, அக். 12—

சென்னை போலீஸ் இலாகாவில் சில நிர்வாக மாறுதல்கள் வரும் நவம்பர் திங்கள் முதல் அமுலுக்கு வரவிருக்கின்றன.

இப்போது மூன்று உதவி தலைமை போலீஸ் அதிகாரிகள் இருக்கின்றனர்; மாறுதல்களின்படி, அந்த எண்ணிக்கை நான்காக உயரும்.

சிறிது நாட்களுக்கு முன்புவரை மதுவிலக்கு அமுல் ஆறு மாவட்டங்களில் கலால் இலாகாவிடம் இருந்தது; இப்போது, போலீஸ் இலாகாவுடன் மதுவிலக்கு இலாகாவும் இணைந்துவிட்டமையினால், இனி எல்லா மாவட்டங்களிலும் மதுவிலக்கு அமுல் பொறுப்பை போலீசாரே மேற்கொள்ளுவர்.

இதுவன்றியில், மேலும் 25 வட்டார போலீஸ் அதிகாரிகளை நியமிக்கவும் புதிதாக 39 போலீஸ் நிலையங்கள் திறக்கவும் ஏற்பாடாகியிருக்கிறது என்று தெரிகிறது.

அறிவிப்பு

தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டிற்காக நிதி அனுப்பிவைக்கும் தோழர்கள் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் பெயருக்கு அனுப்பி வைக்கின்றனர்.

இனி நிதி அனுப்பும் தோழர்கள், 'பொதுச்செயலாளர், தி. மு. கழகம், இராயபுரம், சென்னை—13,' என்ற முகவரிக்கே நிதியினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

'அறிவகம்' சென்னை-13 6—10—55 — பொறுப்பாளர் தி. மு. கழக தலைமை நிலையம்

செய்திச் சுருள்

★

கல்மண்டபம் தி. மு. இளைஞர் படிப்பகம்

விழுப்புரம் வட்டம் கல்மண்டபத்திலுள்ள மேற்படி படிப்பகத் திறப்புவிழா 12—10—55ல் சிறப்புற நடைபெற்றது. தோழர் சி. தமிழ்மணி தலைமையில் தோழர் பொன். சொக்கலிங்கம் தி. மு. கழகக் கொடி ஏற்றிவைத்தார். தோழியர் சத்தியவாணிமுத்து, தேன்மொழி வில்லாளன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வட சென்னை முடிதிருத்துவோர் சங்கம்

11—10—55 காலை 10-30 மணிக்கு, திரு. வி. சுந்தரமூர்த்தி தலைமையில், திரு. வி. டி. செல்வம் அவர்கள் மேற்படி சங்கத்தைத் திறந்துவைத்தார். திரு. பி. நடராசன் காந்தியார் படத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் க. கணேசன், எஸ். ஜி. விருபாக்ஷமூர்த்தி ஆகியோர் 'சங்கமும் ஒற்றுமையும்' என்பது பற்றிப் பேசினர். பின்னர், தோழர்கள் வி. சிவகுரு வேலுவைத் தலைவராகவும், டி. ஆர். வீரமலை, இ. ஆர். ஜெகநாதன், எம். எஸ். சுப்ரமணி ஆகியோரை செயலாளர்களாகவும், தோழர்கள் எம். துரைசாமி, கி. நடேசன் ஆகியோரை முறையே துணைத் தலைவராகவும், பொருளாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பிறப்பு

திட்டக்குடி தி. மு. கழகத் தோழர் தி. கோ. சிவராம் அவர்களின் துணைவியார் தோழியர் மீனாட்சி அம்மையார் 20—9—55 அன்று ஓர் ஆண்மகவுக்குத் தாயானார். தாயும்—சேயும் நலம்.

அனுதாபம்

2—10—55ல், திருவையாறு தி. மு. கழக உறுப்பினர் தோழர் ப. சம்பந்தன், தமது இல்லத்தில் திடீரென இயற்கையெய்தியமை குறித்து, 9—10—55ல் நடைபெற்ற கிளைக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. அன்னார் இயற்கையெய்திய தினத்தன்று தி. மு. கழகத் தோழர்கள் மௌன ஊர்வலம் நடத்தினர்.

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

சென்னையில் நவ. 14-ல் அமுலாகும்

சென்னை, அக். 12—

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம், வரும் நவம்பர் 14-ந் தேதி முதல் சென்னை நகரத்திலும் சுற்றுப்புறங்களிலும் அமுலுக்கு வருகிறது.

குடியரசுத் தலைவர், இராசேந்திரப் பிரசாத் இத்திட்டத்தினை அன்று துவக்கி வைப்பாராம்.

சென்னையில் இதற்காகத் துவக்கப்படவிருக்கும் மருத்துவ மனைகளில் முழு நேர 'டாக்டர்'கள் 20 பேர் நியமிக்கப்படுவர் என்றும், மொத்தம் 15 மருத்துவமனைகள் அமைக்கப்படும் என்றும், இது தவிர, நடமாடும் மருத்துவ மனை ஒன்று பல இடங்களிலும் சுற்றிக் கொண்டிருக்கும் என்றும், ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் 2,000 முதல் 6,000 தொழிலாளர் வரை ஒதுக்கப்படுவர் என்றும் தெரிய வருகிறது.

தமிழர் கடைகள் தாக்கப்பட்டன; பொருள்கள் சூறையாடப்பட்டன!

கொழும்பு நகரில் குழப்பம்

கொழும்பு, அக். 13—

'தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் இலங்கையின் ஆட்சி மொழிகளாக வேண்டும்,' என்ற தங்கள் கட்சிக் கொள்கைக்கு ஆதரவாக கம்யூனிஸ்டு கட்சியினர் நடத்திய பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தினுல் பல இந்தியர்களின் கடைகள் தாக்கப்பட்டதாகத் தகவல் தரப்படுகிறது.

கூட்டத்தினர், இந்தியர் கடைக்குள் புகுந்து, காட்சிக் கூடுகளை உடைத்து, சாமான்களை எல்லாம் வீதியில் வீசி எறிந்து பெரும் கொள்ளை நடத்தியிருக்கின்றனர். தடிகள், கண்ணீர்ப் புகைக் குண்டுகள், துப்பாக்கி சகிதம் வந்த போலீசார்கூட அந்தக் கொள்ளையைத் தடுக்க முடியாது போய்விட்டதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு 'நகர மண்டபத்'தில் கூட்டம் நடைபெற்றது. செஞ்சட்டை அணிந்த கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும், 'கம்யூனிஸ்டுக் கட்சி நீடூழி வாழ்க' என்று குரல் எழுப்பிக்கொண்டே, கூட்டத்திலிருந்த மஞ்சள் உடை தரித்த புத்த மத சன்னியாசிகளை இரக்கமின்றித் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

அந்த சன்னியாசிகளைக் கையால் அறைந்தும், காலால் உதைத்தும், பலவந்தமாக மண்டபத்திற்கு வெளியே தூக்கி எறிந்தனர் என்று கூறப்படுகிறது.

இந்தக் குழப்பத்தின்போது, தமிழ் பேசும் பெண்மணி ஒருவர், வீதியில் வீழ்ந்துகிடந்த புத்த சன்னியாசி ஒருவர் மேல் பாய்ந்து, அவர் அணிந்திருந்த மஞ்சள் அங்கிகளைக் கிழித்தெறிந்ததுடன், அவர் கையில் வைத்திருந்த காகிதக் கட்டுக்களைப் பறித்து வீசி எறிந்தாராம்; இதுவே, இந்தியக் கடைகளுள் புகுந்து கூட்டத்தினர் கொள்ளையடிப்பதற்குக் காரணமாக அமைந்ததாம்.

கூட்டம் முடிந்ததும், அடிபட்ட சன்னியாசிகளுக்கு ஆதரவாகச் சிலர்கூடி, மண்டபத்திற்கு அருகில் இருந்த இந்தியக் கடைகளைத் தாக்க முற்பட்டிருக்கின்றனர்.

ஆயுதந்தரித்த போலீசார் இடத்திற்கு விரைந்திருக்கின்றனர்; உடனே கூட்டத்தினர் நெருக்கமான கடை வீதியாக உள்ள 'டீன்ஸ்' சாலையில் உள்ள இந்தியக் கடைகளைத் தாக்கிச் சூறையாட முற்பட்டிருக்கின்றனர்.

அந்த வட்டத்தில் உள்ள எல்லா இந்தியக் கடைகளையும் மூடிவிடுமாறு போலீசார் தெரிவித்தனர். அமைதி குலைந்த வட்டாரங்களில் எல்லாம் ஆயுதப் போலீசார் நேரந்து சுற்றிவருகின்றனராம்.

தாக்கப்பட்டு சூறையாடப்பட்ட கடைகளுள் பல, தமிழர்களுடையவையாம்.

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளுக்கும் சம 'அந்தஸ்து' வேண்டுமென்பதை, சிங்களவரில் தீவிரவாதிகளாயிருப்போர் எதிர்க்கின்றனர் என்றும், இதை ஒட்டியே கூட்டத்தில், ஒரு சன்னியாசி கேள்வி கேட்க முற்பட்டதாயும், அதனைத் தொடர்ந்தே இந்தக் குழப்பமும், கொள்ளையும் நடந்தது என்றும் கூறப்படுகிறது.

'முதன்மந்திரி பாரபட்சமாக நடந்துகொள்கிறார்'

'தேசீய தொழிற்சங்கத்தை வளர்க்க வழி தவறிச் செல்கிறார்'

திரு-கொச்சி மந்திரி சபை மீது நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

திருவனந்தபுரம், அக். 13—

திரு-கொச்சி மந்திரி சபைமீது புரட்சி சோஷலிஸ்டு கட்சித் தலைவர் டி. கே. திவாகரன் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆறு வாக்கு வித்தியாசத்தில் சட்டசபையில் தோல்வியுற்றது.

"சவாரா தாதுப் பொருள் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்க மந்திரி சபை மறுத்துவிட்டது;

"தொழிலாளர்களுடன் சர்க்கார் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தை சர்க்காரே மீறியிருக்கின்றனர்;

"வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர் பலர், வேலை தேடித் தரும் நிறுவனத்தில் காத்துக்கிடக்கும்போது, சர்க்கார், வெளியிலிருந்து வேலைக்கு ஆள்பிடித்து வருகின்றனர்;

"இதர தொழிற் சங்கங்களுக்கு எதிராக இந்திய தேசியதொழிற் சங்கக் காங்கிரசை வளர்ப்பதில், சர்க்கார் வழிமுறை தவறி நடந்து கொண்டிருக்கின்றனர்;

"மேலும், முதன் மந்திரி பாரபட்சமாக நடந்துகொள்கிறார்—தனது உறவினர்களுக்குச் சலுகை காட்டுகிறார்,"

என்றெல்லாம் குற்றம் சாட்டினார் —தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய திவாகரன்.

தொடர்ந்து பலரும் பேசினர்; பட்டம் தாணுப்பிள்ளையும் பேசினார்.

5 மணி நேரம் விவாதம் நடைபெற்றது.

விவாதத்திற்குப் பதிலளித்து முதன் மந்திரி பனம் பள்ளி கோவிந்த மேனன் பேசினார்.

பின்னர், தீர்மானத்தின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பில் தீர்மானத்திற்கு ஆதரவாக 55 வாக்குகளும், எதிராக 61 வாக்குகளும் கிடைத்தன; தீர்மானம் தோற்றதாக அறிவிக்கப்பட்டது.

பர்மிய தூதுவர் கைது

வரம்பான அளவில் பணம் கையாடினாராம்

இரங்கூன் அக். 13—

கராச்சியில், பர்மாவின் தூதுவராக இருந்த ஊ-சா-வின் என்பவரை பர்மா விசேடப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

பாரிசில் அவர் பர்மாவின் தூதுவராக இருந்தபோது ஆயிரக் கணக்கான ரூபாயைக் கையாடியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். அப்புகார்களுக்குப் பதிலளிப்பதற்காக சமீபத்தில் கராச்சியிலிருந்து அவர் திருப்பி அழைக்கப்பட்டார்.

சலாசருக்கு

'சமாதானப் பதக்க'மாம்!

சவந்த்வாடி, அக். 13—

போர்ச்சுகீசியப் பிரதமர் டாக்டர் சலாசருக்கு, 1953-ம் ஆண்டிற்கான 'சமாதானப் பதக்கம்' ஒன்று, சமாதான நிறுவனமொன்றினுல் அளிக்கப்பட்டுள்ளதாம்.

அப்பரிசளிப்பு விழாவின்போது 66 அமெரிக்கர்கள் கலந்துகொண்டனராம்!

நிசாம்—பம்பாயில் குடியேறமாட்டார்!

ஐதராபாத், அக். 18—

ஐதராபாத்தை விட்டு வெளியேறி பம்பாயில் குடியேற நிசாம் திட்டமிட்டிருப்பதாக வெளிவந்த செய்திகளை அதிகாரி ஒருவர் மறுத்திருக்கிறார்.

'பெர்சிபோலீஸ்' என்ற அரண்மனையை நிசாம், பம்பாயில் வாங்கியிருப்பதற்குக் காரணம், அவருக்கு ஏற்கனவே பம்பாயிலிருந்த 'ஐதராபாத் இல்லம்' இப்போது இல்லை என்பதினுல்தான் என்றும், ஐதராபாத் துண்டாடப்பட்ட பின் பம்பாயில் குடியேறுவதற்காகத்தான் வாங்கப்பட்டது என்று வெளிவந்த செய்தி தவறானது என்றும் அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து நிசாமிற்கும்—இந்திய அரசாங்கத்திற்குமிடையே கடிதப் போக்குவரத்து எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நேருவின் இல்லத்தின் முன்பு ஆர்ப்பாட்டம்?

500 தொண்டர்கள் திரட்டப்படுவர்?

மைசூரை ஒரு தனி மாநிலமாக நீடித்துவைத்திருக்கும்படி கோருவதற்காக டில்லியில் மக்கள் சபையின் முன்பும், பிரதமர் நேரு இல்லத்தின் முன்பும் 'சத்தியாக்கிரகம்' நடத்துவதற்கு 500 தொண்டர்களைத் திரட்ட மைசூர் மாநில இளைஞர் சங்கம் தீர்மானித்திருக்கிறதாம்.

பாராட்டுக் கூட்டம்

16—10—55 மாலை 5 மணிக்கு, சென்னை-அயன்புரம் மார்க்கெட் மைதானத்தில், சென்னை 21-வது வட்ட நகராண்மைக் கழகத் தேர்தலில், தோழர் பி.ஈ. பக்தவத்சலம் அவர்கள் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதைப் பாராட்டி, தோழர் அ. ஏ. லோகநாதன் தலைமையில், தோழர்கள் சுரதா, முகவை ஆர். எஸ். பாண்டியன், எஸ். ஆர். தேவராஜுலு, பி. கே பரமானந்தம் ஆகியோர் பேசுவர்

மறைமலை அடிகள், திரு. வி.க. நினைவுக் கூட்டம்

16-10 55 மாலை $4\frac{1}{2}$ மணிக்கு, ஆம்பூர், எண் 46, சுண்ணாம்புக்காரத் தெரு, திருவள்ளுவர் கழக நிலயத்தில், தோழர் கே. பீர் முகம்மது தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஆ. மா. சிவஞானம் ஆகியோர் பேசுவர்.

அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

அக். 16 காலை: காஞ்சீபுரம் உணவு விவசாயத் துறை விழா;
மாலை: பாபநாசம் (தஞ்சை) தி.மு.கழகப் பொதுக்கூட்டம்

17 புகளூர் (திருச்சி மா.)

18 காலை: நன்னியூர் பஞ்சாயத்து போர்டு வரவேற்பு;
மாலை: குளித்தலை

19 புதுக்கோட்டை

20 காலை: புதுக்கோட்டை கல்லூரி;
மாலை: திருப்பத்தூர் (இராமநாதபுரம் மா.)

21 நாகர்கோயில் - சிறப்புச் சொற்பொழிவு

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

16—10—55 காலை 9 மணிக்கு, திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக பண்மனையில் (எண் 10, லாயர் சின்னதம்பி முதலி தெரு) சென்னை 8-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை 43-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு

16-10-55 பிற்பகல் 2 மணிக்கு, சென்னை 43-வது வட்ட தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம், தோழர் மு. புரட்சிமணி இல்லத்தில் நடைபெறும். அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தர்மபுரி தி. மு. கழக உறுப்பினர்கட்கு

16—10—55 இரவு 8 மணிக்கு, தர்மபுரி முசாபரி பங்களாவில், சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில், தர்மபுரி தி.மு.க. புதிய செயற் குழு அமைப்புக் கூட்டம் நடைபெறும் கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சேவூர் (வ ஆ.) தி. மு. (கிளை) கழகத் தோழர்கட்கு

சேவூர் கிளைக் கழகத்தின் தேர்தல், 16—10—55 காலை 10 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், மாவட்டச் செயலாளரால் நடத்திவைக்கப்படும்.

நகர இளைஞர் கழகம்

15-10-55 மாலை 6-30 மணிக்கு, சென்னை-சூளை, மாணிக்கச் செட்டித் தெரு, மேற்படி கழகமனையில், 'மக்களும்-இலக்கியமும்' என்பது பற்றி ஜீவபந்து திரு டி. எஸ் சிபால் பேசுவார்.

குறள் வகுப்பு

16—10—55 காலை 9 மணிக்கு திருச்சி, எண் 1. பெரிய செட்டித் தெரு, 'பாண்டியன் படிப்பகத்தில், 'இல்வாழ்க்கை' என்ற அதிகாரத்திற்கு, திரு. தி. ரா. தருமராசனர் விளக்கவுரையாற்றுவார்.

பர்மா-ஷெல் தொழிலாளர் சங்க மாநாடு

14-10-55 மாலை 5-30 மணிக்கு: சென்னை-செயின்ட் மேரீஸ் மண்டபத்தில், திரு எஸ் குருசாமி தலைமையில் நடைபெறும். திரு. ப சு சின்னதுரை மாநாட்டைத் திறந்து வைப்பார். திரு. வி. வி கிரி பேசுவார்.

15-10-55 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு, சங்க உறுப்பினர் குடும்ப தினம் நடைபெறும். திரு மோகனரங்கம் தம்பதிகளின் நாட்டிய நிகழ்ச்சியும், இன்ஸ்டலேஷன் உறுப்பினர்களால் ஓரங்க நாடகமும் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

பாபநாசம் (தஞ்சை)
கீழ வீதியில்
16—10—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. கோவிந்தசாமி
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்

★

மதுரமங்கலம்
15—10—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. டி. எஸ். மணி
பேசுவோர்:
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்
சி. வி. எம். அண்ணாமலை
(அன்று இரவு 9 மணிக்கு, அண்ணா தீட்டிய 'குமரிக்கோட்டம்' நாடகம் நடைபெறும்.)

★

துறையூர்
பாரதி தியேட்டரில்
16—10—55 காலை 9 மணிக்கு
தி. மு. கழக 7-வது ஆண்டு விழா
தலைவர்: பொ. சண்முகம்
பேசுவோர்:
கண்ணதாசன்
து. ப. அழகமுத்து
இசை: நாகூர் அனீபா குழுவினர்

★

ஆம்பூர்
முகம்தலி திடலில்
16—10—55 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
டி. கே. சீனிவாசன்

★

திமிரி (வ. ஆ.)
தி. மு கழக துவக்க விழா
16—10—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
இராம. அரங்கண்ணல்
ஏ. எல். சி. கிருட்டிணசாமி
(விழாக் கூட்டத்தில் மாநில மாநாட்டிற்கு நிதி அளிக்கப்படும்)

திராவிட நாடு பிரிவினை நாள் விழா

"16-10-55 மாலை 5 மணிக்கு, சித்தூர் தி. மு. கழகக் கிளைச் சாலையில் திராவிட நாடு பிரிவினை நாள் விழாவும், சித்தூர் கிளைக் கழக ஆண்டு விழாவும், அண்ணாமலை தோட்டத்தில், தோழர் எம். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். ஏ. ரஷீத் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்று மாலை 3 மணிக்கு, சித்தூர் காந்திச்சாலை தி. மு. கழகக் கட்டிடத்திலிருந்து ஊர்வலம் நடைபெறும்.

"அன்று, சித்தூர் மாவட்ட தி. மு. கழக நிர்வாகக் குழு தேர்தலும், தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் நடைபெறும்,"

என்று, சித்தூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

15-10-55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சென்னை-இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோயில் தெரு, வட சென்னை குறள் நெறிக் கழக அறையில், தோழர் சு. சேகர் தலைமையில் நடைபெறும். 'எதிர்காலம்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம் ஏ.